விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 284 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 13 திங்கட்கிழமை (29.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-3980)
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## மன்னாரில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு மன்னார் பிரஜைகள் குழு அழைப்பு





(மன்னார்)

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிராகவும் மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் இன்று திங்கட்கிழமை (29) மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள பொது முடக்கல் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்து 15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் தமிழரசுக் கட்சியை சந்திப்பார்

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்கான இலங்கைத் தமிழரசுக் கட்சியின்கோரிக்கை நிறைவேறும். ஜனாதிபதி நாடு திரும்பியதும் குறித்த சந்திப்புக்கான திகதியொன்றினை வழங்குவார் என கடற்றொழில் அமைச்சர் இராம 15ஆம் பக்கம் பார்க்க

## பூநகரியில் விபத்து: சிறுமி உயிரிழப்பு

### உதவ மறந்து படம் எடுத்த அபத்தம்



(யாழ்ப்பாணம்)

பூநகரி சங்குப்பிட்டிப் பாலத் தருகில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானபோது படுகாய மடைந்தவர் 04ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் இழைத்த குற்றங்கள் விசாரணைச் செயன்முறையில் சோமரட்ணவின் சாட்சியம் உண்டா?

### ஐ.நா அறிக்கையாளர்கள் கேள்விக்கணை

(கொழும்பு)

இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் சாட்சியம் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக சோமரட்ண ராஜபக்ஷ அறிவித்திருக்கும் நிலையில், விசாரணைச் செயன்முறைகளில் அவர் உள்வாங்கப்படுவாரா? என வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் அறிக்கையாளர்கள் இலங்கை அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளனர். (04ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்களில் ஸ்ரிக்கர் ஒட்டுவது சட்டவிரோதம்

### மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

(கொழும்பு)

சட்டத்தரணிகள், மருத்துவர்கள் அல்லது பிற நிபுணர்கள், பாடசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்களைக் குறிக்கும் வகையில் வாகனங்களின் முன் கண்ணாடியில் பல்வேறு அளவுகளில் ஸ்ரிக்கர்களை ஒட்டுவது சட்டவிரோதமானது என மோட்டார் 15ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசியலமைப்பு விரைவில் அரங்கேறும்

### ஆளுங்கட்சி உறுதி



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர் அதுபற்றி விவாதித்து கலந்துரையாடுவதற்கான சந் 02ஆம் பக்கம் பார்க்க

## நாமல் உள்ளிட்ட முக்கிய புள்ளிகள் குவித்த சொத்துக்கள் குறித்து விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளடங்கலாக கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்த அமைச்சர்கள் உட்பட இருபது அரசியல்வாதிகள் சட்டவிரோதமாக குவித்த சொத்துக்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன்படி நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, மகிந்த அமரவீர, பியசேன கமகே, பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்தன, துமிந்த திசாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, சாகல ரத்நாயக்க, மனுஷ நாணயக்கார, முன்னாள் துணை சபாநாயகர் 15ஆம் பக்கம் பார்க்க

## இளம் ஆசிரியர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி மத்தி, கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த அ.சஜேந்திரன் (வயது-30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## ராஜிதவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை



(கொழும்பு)

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள் 15ஆம் பக்கம் பார்க்க

## விஜயின் கரூர் பிரசாரத்தில் நடந்தது என்ன?



08ஆம் பக்கம் பார்க்க

## வீடு தேடிச் சென்று மகிந்தவை சந்தித்த ரணில்



05ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேல்ஸ்மேன் தேவை

எமது ஜவுளி கடைக்கு பிடவை அனுபவம் உள்ள அல்லது பழக விருப்பம் உள்ள ஆண்கள் தேவை.

நேரில் வரவும்

(5543)

**சிவகணேசன் TEX**
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்



## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5527)

**076 663 3199**



## புதிய...

தர்ப்பம் சகல தரப்பினருக்கும் கிட்டும் எனத் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர், நல்லாட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவு மீள ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த முன்மொழிவுகளை ஆராய்ந்து அவை தொடர்பிலும் பரிசீலனை செய்யப்படும்.

அத்திருத்தங்களும் உள்வாங்கப்பட்ட புதிய அரசியலமைப்பு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றார். (ந-7)

## கண்ணீர்க் காணிக்கை



தோற்றம் 17 . 02 . 1963

மறைவு 27 . 09 . 2025

**உயர்திரு.சபாபதி செல்லையா உலகநாதன்**

முன்னாள் தலைவர் அகில இலங்கை நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்
( B.A, M.A, Mphil(Geography) Dip.in. human rights
முன்னாள் கிராம உத்தியோகத்தர், சிறுவர், மகளிர் நன்னடத்தை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் )

அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!

தலைமை ஒருங்கிணைப்பாளர்
அகில இலங்கை நம்பிகள் நல்வாழ்வுக் கழகம்
யாழ்ப்பாணம் இலங்கை.

(1603)

## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் யாழ் கிளை

**விஜயதசமி அனுமதியும் நாள் வகுப்பும்**

எதிர்வரும் 02.10.2025 வியாழக்கிழமை (விஜயதசமி) அன்று பி.ப 5.30 மணிக்கு கலை வகுப்புகளுக்கான புதிய மாணவர்களை அனுமதித்தலும் நாள் வகுப்பும் நடைபெறவுள்ளது. இதில் ஆர்வமுள்ள மாணவர்கள் பதிவு செய்து இணைந்து கொள்ள முடியும். பின்னர் அனுமதி வழங்கப்படமாட்டாது.

**நடைபெறும் கலை வகுப்புகள்**

- அறநெறி
- பண்ணிசை
- சாங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஓகன்
- சித்திரம்
- மாலை கட்டுதல்
- கோலம் போடுதல்
- தோரணம் பின்னுதல்












(C-3981)

பதிவாளர்
யாழ் கிளை
428, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 077 578 6638

பதிவாளர்
காரைநகர்


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


## 17ம் ஆண்டு என்றும் நெஞ்சைவிட்டு அகலாத நினைவலைகள்



மண்ணில் 12.04.1961

விண்ணில் 29.09.2008

**அமரர் கந்தசாமிப்பிள்ளை விக்னராஜேஸ்வரன்**
(B.Sc, PGDE, ISA, SLPS)

திதி : புரட்டாதி அமாவாசை (21.09.2025)

நின்றும் இருந்தும்
கிடந்தும் நடந்தும்
என்றும் நினைவுகளால்
கதறி அழுதே
கண்ணீரைச் சொரிகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வடிவாம்பிகை சமேதர முன்னை நாதரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பன்னாலை,
தெல்லிப்பளை.

என்றும் உங்கள் பிரிவுத் துயரால் வாடும்
அன்பு மனைவி, குடும்பத்தினர்
3 ம் வட்டாரம் நயினாதீவு

(1596)

## மரண அறிவித்தல்



மலர்வு 27 - 10 - 1941

உதிர்வு 28 - 09 - 2025

# கந்தையா தர்மலிங்கம்

உடுவில் தெற்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் செட்டி வீதி, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா (சின்னக்கிளி) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லதா(லண்டன்), ஜெயக்குமார்(அப்பன்)(சுவிஸ்), சுமதி (பிரான்ஸ்), சுதா(பிரான்ஸ்), பிரேமன்(லண்டன்), ஜெசின் (இணுவில்), கார்த்திகா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
076 662 9018

(C-3983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு

# இருபது இலட்சம் ரூபா இழப்பீடு



## தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்

(தமிழ்நாடு)

**கரூரில் பிரசாரக்கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், என் நெஞ்சில் குடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம்.

கற்பனைக்கும் எட்டாத வகையில், கரூரில் நிகழ்ந்ததை நினைத்து. இதயமும் மனதும் மிகமிகக் கனத்துப் போயிருக்கும் சூழலில். நம் உறவுகளை இழந்து தவிக்கும் பெருந்துயர்மிகு மனநிலையில், என் மனம் படுகிற வேதனையை எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. கண்களும் மனசும் கலங்கித் தவிக்கிறேன்.

நான் சந்தித்த உங்கள் எல்லோருடைய முகங்களும் என் மனதில் வந்து போகின்றன. பாசமும் நேசமும் காட்டும் என் உறவுகளை நினைக்க நினைக்க, அது என் இதயத்தை மேலும் மேலும் அதன் இடத்திலிருந்தே நழுவச் செய்கிறது.

என் சொந்தங்களே... நம் உயிரான உறவுகளை இழந்து தவிக்கும் உங்களுக்கு. சொல்லொணா வேதனையுடன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிற அதே வேளையில், இப்பெரும் சோகத்தை உங்கள் மனதுக்கு நெருக்கமாக நின்று பகிர்ந்து கொள்கிறேன்.

நமக்கு ஈடு செய்யவே இயலாத இழப்புதான். யார் ஆறுதல் சொன்னாலும் நம் உறவுகளின் இழப்பைத் தாங் கவே இயலாதுதான். இருந்தும். உங்கள் குடும்பத்தில் ஒருவனாக. உறவினை இழந்து தவிக்கும் நம் சொந்தங்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 20 லட்ச ரூபாயும், காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்குத் தலா 2 லட்ச ரூபாயும் அளிக்க எண்ணுகிறேன்.

இழப்பிற்கு முன்னால் இது ஒரு பெரும் தொகையன்று தான். இருந்தும், இந்த நேரத்தில், என்னுடைய உறவுகளான உங்களுடன் மனம் பற்றி நிற்க வேண்டியது உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவனாக என் கடமை.

அதேபோல, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அனைத்து உறவுகளும் மிக விரைவில் குணமடைந்து வீடு திரும்ப இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். சிகிச்சையில் இருக்கும் நம் உறவுகள் அனைவருக்கும் அனைத்து உதவிகளையும் நம் தமிழக வெற்றிக் கழகம் உறுதியாகச் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைவன் அருளால், அனைத்தில் இருந்தும் நாம் மீண்டு வர முயற்சிப்போம் என்று கூறியுள்ளார். (க-8)

# சர்வதேச பொறிமுறை தேவை ஐ.நாவில் அனந்தி சசிதரன்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் மாத்திரம் இக்கூட்டத்தொடரில் காலநீடிப்பு செய்யப்படுமாக இருந்தால், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு அப்பால் இனவழிப்பு மற்றும் இனவழிப்பு நோக்கம் என்பன தொடர்பிலும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஏதுவான வகையில் அச்செயற்றிட்டம் மேம்படுத்தப்பட வேண்டும் என வடமாகாண முன்னாள் அமைச்சரும், வலிந்து காணாமலாக்கப்படலால் பாதிக்கப்பட்ட வருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின் பக்க நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்விவகாரத்தை அணுகுவதற்கு அவ்விடயம் சார்ந்து முழுமையான நியாயாதிக்கத்தையும், சுதந்திரத்தையும் கொண்டிருக்கக்கூடிய சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று அவசியமாகும்.

அத்தகைய பொறிமுறையின் ஊடாக மாத்திரமே சர்வதேச நீதியை நிலைநாட்டுவதற்கு அவசியமான சாட்சியங்களைத் திரட்டமுடியும். நான் இங்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற ரீதியில் பேசுகிறேன். போரின் இறுதி நாளில் எனக்கும், எனது பிள்ளைகளுக்கும் முன்னால் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த எனது கணவர் காணாமல் போனார்.

இக்கூட்டத்தொடரில் வெறுமனே இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் மாத்திரம் காலநீடிப்பு செய்யப்படுமாக இருந்தால், போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு அப்பால் இனவழிப்பு மற்றும் இனவழிப்பு நோக்கம் என்பன தொடர்பிலும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஏதுவான வகையில் அச்செயற்திட்டம் மேம்படுத்தப்பட வேண்டும்.

உள்ளகப்பொறிமுறைகளினால் ஏற்கனவே ஏமாற்றமடைந்திருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மேலும் ஏமாற்றுவதாகவே அது அமையும் என அவர் சுட்டிக்காட்டினார். (க-8)

# அர்ஜீன மகேந்திரனை அழைத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரனை கைது செய்யும் முயற்சியை கைவிடவில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரன் இலங்கைக்கு அத்தியாவசியமான ஒருவர் என்பதை சிங்கப்பூருக்கு அறிவித்துள்ளோம்.

அவர் தனது பெயரை மாற்றம் செய்து சிங்கப்பூர் பிரஜையாக அந்நாட்டில் வசித்து வருகிறார்.

அர்ஜீன மகேந்திரனை கைது செய்வதில் அந்நாட்டின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஒரு சில தடைகள் காணப்படுகின்றன" அதைச் சரிசெய்து அவரை நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்போம் எனத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டு மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் அரசாங்கத்திற்கு 10 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான இழப்பு ஏற்படுத்தியதாகக் கூறி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜீன மகேந்திரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 26 ஆம் திகதி கொழும்பு தலைமை நீதிபதி அசங்க எஸ்.போதரகம முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்படி, குறித்த வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# போதைக்கு அடிமையாகும் பொலிஸ் அதிகாரிகள்

## அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)


புதிதாகப் பணியமர்த்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் 15விகிதம் முதல் 20 விகிதம் வரையானோர் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும், இதன் விளைவாக, இந்த ஆண்டு ஜனவரி முதல் 68 அதிகாரிகள் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு விசேட தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட அதிர்ச்சி தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நல்ல மற்றும் அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்ப சிறந்த மனித வளம் இருக்க வேண்டும். இந்த போதைப் பொருள் அச்சுறுத்தலுக்கு இரையாகச் செல்வதன் மூலம் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க முடியாது. இது நாட்டின் எதிர்கால சந்ததியினரை அழிக்கும்.

எனவே போதையை இந்த நாட்டில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் உணர்வு பூர்வமாகப் பணியாற்ற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09 . 06 . 1965

மறைவு 27 . 09 . 2025

யாழ்ப்பாண கல்வி வலய நடனபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி அகல்யா ராஜபாரதி அவர்களின் அன்புக் கணவர்

அமரர்.

**சின்னத்தம்பி ராஜபாரதி**

அவர்களினஇழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1601)

யாழ்ப்பாண கல்வி வலய நடனபாட ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# தர்மமுழக்கம் துடுப்பாட்டத் தொடரில் சம்பியனானது தருமபுரம் மத்திய கல்லூரி

**தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கிடையிலான 8 ஆவது தர்ம முழக்கம் துடுப்பாட்டத் தொடரில் தருமபுரம் மத்திய கல்லூரி அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.**



தர்மமுழக்கம் என்று அழைக்கப்படுகின்ற கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணிக்கும் தருமபுரம் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான 8 ஆவது தர்ம முழக்கம் துடுப்பாட்ட தொடர் முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

முதல் நாள் போட்டியில் முதலாவது இனிங்சில் தருமபுரம் மத்திய கல்லூரி அணியினர் 150 ஓட்டங்களை பெற்றனர். முழங்காவில் மகா வித்தியாலய அணியினர் முதலாவது இனிங்சில் 101 ஓட்டங்களை பெற்றனர்.

இரண்டாவது நாள் இரண்டாவது இனிங்சில் தருமபுரம் மத்திய கல்லூரி அணியினர் 64ஓட்டங்களை பெற்று அனைத்து இலக்குகளையும் இழந்தனர்.114ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலய அணி 90ஓட்டங்கள் பெற்ற நிலையில் அனைத்து இலக்குகளையும் இழக்க 23ஓட்டங்களால் தருமபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இதுவரை நடைபெற்ற எட்டு போட்டிகளில் 6போட்டிகளில் தருமபுரம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றிருப்பதுடன். ஒரு போட்டியில் முழங்காவில் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது. ஒரு போட்டி சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

எட்டாவது துடுப்பாட்டத் தொடரின் ஆட்டநாயகனாக தருமபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் ர.தமிழ்வானன் தெரிவு செய்யப்பட்டார்.சிறந்த துடுப்பாட்ட வீரராக முழங்காவில் மகா வித்தியாலய வீரர் ஜெ.சதாமாறன் தெரிவு செய்யப்பட்டார்.சிறந்த பந்து வீச்சாளராக தருமபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் ஆர்.தமிழ்வானன் தெரிவு செய்யப்பட்டார்.சிறந்த களத்தடுப்பாளராக முழங்காவில் மகா வித்தியாலய வீரர் எஸ்.அருட்செல்வன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (3-316)

## விசாரணைச்...

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ அப்படுகொலை குறித்தும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம மற்றும் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள், வலிந்து காணாமலாக்கப்படல்கள் மற்றும் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்துவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார்.

அரசாங்கத்தின் சார்பில் அதற்குப் பதிலளித்துள்ள அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலையில் சென்று சந்தித்ததாகவும் அவசியமான தகவல்கள் பெறப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவரைத்தொடர்ந்து பதிலளித்த பொலிஸ் திணைக்கள அதிகாரி ஒருவர் சோமரத்ன ராஜபக்ஷவின் வெளிப்படுத்தல்கள் இலங்கையின் குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் சுயாதீனத்துவம், பக்கச்சார்பின்மை மற்றும் நடுநிலைமை என்பவற்றுக்கான நிரூபணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் சோமரத்ன ராஜபக்ஷவினால் செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் முதன்முதலாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கமளித்த அவர், அதனையடுத்து அப்போது செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் ஊடாக 15 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டதாகவும் அவற்றில் 4 உடல்கள் யாருடையவை என அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் மரணதண்டனைக் கைதியான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உள்ளடக்கப்படுவாரா? அவரின் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படுமா? என்ற கேள்விகளை வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் அறிக்கையாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ந-7)

## பூநகரியில்...

களை மீட்டு உதவுவதற்கு எவரும் முன்வராமையால், சிறுமியொருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இதில் தனுஷ்கா (வயது -5) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் சிறுமி உட்பட நால்வர் பயணித்த நிலையில், வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சங்குப்பிட்டிப் பாலப்பகுதியில் உள்ள மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தை அடுத்து அப்பகுதியால் பயணித்தவர்கள் அவ்விடத்தில் திரண்ட போதிலும் காயமடைந்தவர்களுக்கு உதவவோ முதலுதவி வழங்கவோ எவரும் முன்வராத நிலையில் புகைப்படங்கள் எடுப்பதிலே அவர்கள் கருசனை காட்டினர்.

நோயாளர் காவு வண்டி சம்பவ இடத்துக்கு வர 40 நிமிடங்கள் தேவை எனும் சூழலில் விபத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட சிறுமியைக் காப்பாற்ற எவரும் முன்வராத நிலையில் இளைஞன் ஒருவர் இரத்த வெள்ளத்தில் கிடந்த சிறுமியை மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முனைந்துள்ளார்.

இதன்போது அப்பகுதியால் வாகனத்தில் வந்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி துரிதமாகச் செயற்பட்டுச் சிறுமிக்கு முதலுதவி அளித்துத் தனது வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

ஆயினும் தலையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து அதிகளவு இரத்தம் வெளியேறியமையால் சிறுமி சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். (ந-7)

# 180 போட்டிகளின் பின் முதல் வெற்றி புதிய வரலாறு படைத்த நேபாளம்






மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் ரி-20 போட்டியில் நேபாள அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

நேபாளம், மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான ரி-20 தொடர் ஷார்ஜாவில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த முதல் போட்டியில் நேபாள அணி முதலில் துடுப்பாடியது.

அணித்தலைவர் ரோஹித் பாடீல் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். குஷால் மல்லா 21 பந்துகளில் 30 ஓட்டங்களும், குல்சன் ஜா 16 பந்துகளில் 22 ஓட்டங்களும் விளாசினர்.

இதன்மூலம் நேபாளம் 8 விக்கெட்டுக்கு 148 ஓட்டங்கள் எடுத்தது. ஜேசன் ஹோல்டர் (Jason Holder) 4 விக்கெட்டுகளும், நவின் பைடைசீ 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, நேபாள பந்து வீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் திண றினர்.

அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்த மேற்கிந்திய தீவுகள், 20 ஓவர்கள் முழுமையாக ஆடி 9 விக்கெட்டுக்கு 129 ஓட்டங்களே எடுத்தது.

நவின் பைடைசீ 22 ஓட்டங்களும், பாபியான் ஆலன் 19 ஓட்டங்களும், அகேல் ஹொசைன் 9 பந்துகளில் 18 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் நேபாள அணி 19 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

180 போட்டிகளில் விளையாடியுள்ள நேபாள அணி, முதல் முறையாக டெஸ்ட் தகுதியுடைய அணி ஒன்றை வீழ்த்தி சாதனை படைத்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தைத் தூண்டாமல் நினைவேந்த உரிமையுண்டு



(கொழும்பு)

இலங்கையில் நினைவேந்தல் நடவடிக்கைகளில் ஈடுபட தடை விதிக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வு கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தலைமையிலான தூதுக்குழு கலந்து கொண்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு எத்தனை இழப்பீட்டுப் பணம் வழங்கப்பட்டுள்ளது என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குழு நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அனைத்துக் குடிமக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் ஒரு விரிவான இழப்பீட்டுத் திட்டம் உள்ளதா? காணாமல் போனவர்களின் நினைவாக ஒரு தேசிய தினம் உருவாக்கப்படுமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

2024 ஆம் ஆண்டில் 5,000 குடும்பங்களுக்கு ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதில், மீதமுள்ள நிதியைப் பயன்படுத்த என்ன திட்டங்கள் உள்ளன? ஒரு நபர் உண்மையிலேயே இறந்துவிட்டார் என்பது உறுதியாகத் தெரிந்தால் மட்டுமே இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதை அரசு எவ்வாறு உறுதிப்படுத்துகிறது? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இறப்புச் சான்றிதழ்களை இல்லாமைச் சான்றிதழ்களாக மாற்றுவதற்கான நடைமுறைகள் என்ன? சான்றிதழ்களைப் புதுப்பிப்பதற்கான தேவைகள் என்ன? என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குழு நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளித்துள்ள இலங்கைத் தூதுக்குழு, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நினைவேந்தல்களை நடத்த அனுமதிக்கப்படுகிறார்கள்.

இருப்பினும், அவை பயங்கரவாத அமைப்புகளைப் போற்றுவதாக இருக்கக் கூடாது என்று அறிவித்துள்ளது. (க-8)

## மகிந்த- ரணில் சந்திப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க நேற்று தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் நீண்ட நேரம் சுமுகமான உரையாடலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்நாயக்க மற்றும் ரமேஷ் பத்திரண ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## இலங்கையில் அதிகரிக்கும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை




(கொழும்பு)

செப்ரெம்பர் மாதத்தில் மொத்தம் 126,379 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ள தரவுகளின்படி,

இந்தியாவில் இருந்து மொத்தம் 37,179 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது 29.4% ஆகும். செப்ரெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 8,937 பேரும், ஜேர்மனியிலிருந்து 7,799 பேரும், அவுஸ்திரேலியாவிலிருந்து 7,049 பேரும், சீன நாட்டிலிருந்து 7,226 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 16 இலட்சத்து 92 ஆயிரத்து 902 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், இந்தியாவிலிருந்து 3 இலட்சத்து 62 ஆயிரத்து 774 பேர், இங்கிலாந்திலிருந்து ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 78 பேர் மற்றும் ரஷ்யாவிலிருந்து ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 452 பேர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்டுள்ளது. (க-8)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடி அஞ்சலகத்தை தரமுயர்த்துங்கள்

## இயற்கையின் நண்பர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி) ..............................

**கைதடி அஞ்சலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என இயற்கையின் நண்பர்கள் அமைப்பினர் அஞ்சல்மா அதிபரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

கைதடி அஞ்சலகம் நிரந்தர கட்டடம் இல்லாமல் தொடர்ந்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றது.

அஞ்சலகத்திற்கென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மாமனிதர் நடராஜா ரவிராஜ் அவர்களால் தனியார் ஒருவரிடம் இருந்து அஞ்சல் திணைக்களத்துக்கு பெற்றுக் கொடுத்த காணியில் நிரந்தர கட்டடம் அமைக்க நிதி பெற்றுக் கொடுத்து இருந்த போதும் தற்போது வரை கட்டடம் அமைக்கப்படாமல் உள்ளது.

எனவே கைதடி அஞ்சலகம் தர முயர்த்தப்பட வேண்டும். அத்துடன் இதற்கென முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு என்ன நடைபெற்றது மற்றும் கட்டட திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் ஏன் நிறுத்தப்பட்டது என்பது உள்ளிட்ட அனைத்தும் விசாரணை செய்யப்பட வேண்டும்.

என்பதுடன் இதற்கென தனியாரால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் விரைவாக நிரந்தர அஞ்சலக கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் அஞ்சல்மா அதிபரை கேட்டுக்கொள்கின்றது என அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (8-30)

# கட்டைக்காட்டில் போராட்டம்



(அராலி)

மன்னார் காற்றாலை திட்டத்தை எதிர்த்து போராடிய பொதுமக்கள் மீதும் பங்கு தந்தையர்கள் மீதும் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை கண்டித்து வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் அமைதி வழி போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கட்டைக்காடு பொதுமக்களின் ஒழுங்குபடுத்தலில் கட்டைக்காடு பங்கு தந்தை தலைமையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அழிக்காதே அழிக்காதே மன்னாரை அழிக்காதே, வேண்டாம் வேண்டாம் காற்றாலை திட்டம் வேண்டாம், அள்ளாதே அள்ளாதே எமது மண்ணை அள்ளாதே போன்ற வாசகங்களை ஏந்தி கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (8-104)

# நெடுந்தீவில் 12 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 12 இந்திய கடற் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுச்சேரியை சேர்ந்த 12 கடற்றொழிலாளர்கள் ஒரு படகில் , நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன் , அவர்களின் படகினையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட கடற் தொழிலாளர்களை மயிலிட்டி மீன்பிடி இறங்கு துறைக்கு அழைத்து சென்ற கடற்படையினர் , கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# சிவகுரு ஆதீனத்தில் ஆன்மீகவுரை

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் நவராத்திரியை முன்னிட்டு தினமும் மாலை 6.00 - 6.30 மணி வரை ஆனமீகவுரை ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நிகழ்த்தப்படுகின்றது.

அந்த வகையில் இன்று திங்கட்கிழமை: படிக்க/தியானிக்க வேண்டிய நேரம் எது ?. நாளை செவ்வாய்க்கிழமை : படிக்க/தியானிக்க வேண்டிய சூழல் எது ?

நாளை மறுதினம் புதன் கிழமை: கல்வி ➡ அறிவு ➡ ➡ ஞானம் ? வெற்றி, எனும் தொனிப் பொருட்களில் ஆன்மீக உரைகள் இடம்பெறவுள்ளன. (8)

# சிறுவர் படைப்பாக்கப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட தேசிய கலை இலக்கிய பேரவையும் காலையடி மறுமலர்ச்சி மன்றமும் இணைந்து நடத்தும் சிறுவர் படைப்பாக்கப் போட்டிகள் நிகழ்வின் ஒரு பகுதியாக இடம்பெறவுள்ளது.

பிள்ளைகளுக்கான கதை சொல்லல் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் 10 வயதுக்குட்பட்ட அனைவரும் பங்குபற்ற முடிவதோடு பிள்ளைகளின் வயதுப் பிரிவிற்கேற்ப போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்புவோர் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் தரம், கல்வி கற்கும் பாடசாலை மற்றும் பங்குபற்றும் போட்டி ஆகிய விவரங்கள் அடங்கியதாகச் சுயமாகத் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 3.10.2025ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக மாலை 3-6 மணிக்குள் மறுமலர்ச்சி மன்ற நூலகத்தில் வழங்கவோ அல்லது தபாலில் மறுமலர்ச்சி மன்றம் காலையடி, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவோ முடியும் அத்துடன் மேலதிக தகவல்களுக்கு 077 002 7621 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவித்துள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 200 |
| தக்காளி | 200 | 200 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 300 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 200 |
| கரட் | 200 | 250 | 300 | 250 |
| பூசணி | 60 | 60 | 100 | 50 |
| புடோல் | 120 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-350 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 250 | 100 | 350 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 250 | 400 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 120 |
| கறிமிளகாய் | 300 | 450 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 300 | 180 |
| கீரை - 1 பிடி | 140 | 80-140 | 150 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1000 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 800 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 350 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 120 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 250 |

# கடற்கரை வீதி புனரமைப்பு

(சாவகச்சேரி)

கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தின் கடற்கரை வீதி மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி ஒதுக்கீடான 5மில்லியன் ரூபாய் செலவில் தார் வீதியாக புனரமைக்கப்பட்டு வருவதாக சாவகச் சேரி நகரசபை உறுப்பினர் திருமதி பவுலினா சுபோதினி தயாளராசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மேற்படி கடற்கரை வீதியானது சாவகச்சேரி நகரசபை எல் லைக்குட்பட்டு 2.5 கிலோ மீற்றர் நீளமானதாகவும் தொடர்ந்து சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்டு கச்சாய் துறைமுகம் வரை நீண்டு செல்கின்றது.

இருப்பினும் தற்போது இவ் வீதியானது நகரசபை எல்லைக்குட்பட்டு 600 மீற்றர் நீளம் வரையே தார் வீதியாக புனரமைக்கப்படுகின்றது.

இவ்வீதியை முழுமையாக கச்சாய் துறைமுகம் வரை புனரமைக்கும் பட்சத்தில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் பயனடைய முடியும்.

அதனூடாக கிராமிய பொருளாதாரத்தையும் மேம்படுத்த இயலும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (8-30)

# கண்ணகியம்மன் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலய நவராத்திரி உற்சவம் கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு கண்ணகியம்மன் ஆலயத்திலிருந்து எழுந்தருளி தெரு வீதியூடாக மக்களுக்கு அருள்பாலித்து வட்டு மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள இலுப்பையடி ஞானவைரவர் ஆலயத்தில் வள்ளி வாழை வெட்டும் வைபவமும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்கள் என்னைத் தலையில் வைத்தனர் அநுர அரசு அவ்வாறு செய்யவில்லை

## புலம்பும் சுமணரத்ன தேரர்

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் வடக்கு - கிழக்கில் முழுச் சுதந்திரத்துடன் செயற்பட்டோம் ஆனால் தற்போதைய ஆட்சியில் அவ்வாறு செயற்பட முடியாதுள்ளது என மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும், எப்படியான சவால்கள் வந்தாலும் எமது நாட்டின் வீரம் மிகுந்த தலைவர்கள் தொடர்பிலும், சிரேஷ்ட தலைவர்கள் தொடர்பிலும் நாங்கள் கதைப்போம்.


ஏனெனில் பௌத்த சாசனத்தை அவர்கள் பாதுகாத்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் எமக்கு எவரிடமும் அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் முதுகெலும்புடன் செயற்பட்டு பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தோம். அதேபோல், தொல்லியல் இடங்களைப் பாதுகாப்பதற்குரிய வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தோம்.

ஆனால் தற்போது அவற்றின் மீதான பிடிமானங்களை இழந்துள்ளோம். இது தொடர்பாகக் கதைக்கும்போது எம்மை அரச எதிர்ப்பாளர் என்று கூறுகின்றனர். அரசியல் சாசனத்தைப் பாதுகாப்பதற்கான உரிமையை அரசு எமக்கு வழங்க வேண்டும் என்றார். (க-8)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட புத்தாக்க போட்டி அண்மையில் கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதில் வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.சஜித் மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.




(படம்: மகாலிங்கம்)

# எங்களுக்காக எங்களுடன் நின்றவர்கள் எம் தொப்புள் கொடி உறவுகள்

## அவர்களின் இன்னலில் நாமும் பங்கு கொள்கிறோம்



தமிழகத்தின் கரூர் மாவட்டம் - வேலுச்சாமிபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியற் பேரணியில் உயிரிழந்தவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

குறித்த செய்திகள், "சனத்திரட்சியில் சிக்குண்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 40 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் மிகுந்த மனவேதனைக்குரியது.

எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த இந்த அசம்பாவிதத்தால் தாய்த்தமிழகத்தைச் சேர்ந்த எமது தொப்புள் கொடி உறவுகளான அப்பாவிப் பொதுமக்கள் 40 பேர் அநியாயமாக உயிரிழந்தமை எமக்கும், எமது மக்களுக்கும் மிகுந்த மனத்துயரை ஏற்படுத்தியிருக்கிறது. நெருக்கடியும், கனதியும் மிக்க இந்த துயர் மிகுந்த சூழலால் பாதிப்புற்றிருக்கும் எல்லாத்தரப்பினருடனும் உணர்வு ரீதியாக நாமும் கரம் கோர்த்துக்கொள்கிறோம்.

மிகக்குறிப்பாக, புகுமுக அரசியல் கட்சியாக தனது புரட்சிகர அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்திருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தினதும், நண்பர் விஜய் அவர்களினதும் அரசியல் பயணம், துயரமும் - கனதியும் மிக்க இந்த உயிர்த் தியாகங்களின் மீது, உறுதி மிக்கதும் மக்கள் மயப்பட்டதுமாக வலுவாக கட்டமைக்கப்பட்டும்.

இழப்பின் வலிகளையும் - ரணங்களையும் உணர்ந்தவர்களாக, ஈழத்தமிழர்களின் உரிமை மீட்புக்காக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்பணித்தும் - தீக்குளித்தும் உயிர்க்கொடையளித்த தமிழக உறவுகளின் அளப்பெரும் தியாகங்களை நெஞ் சேந்தியவர்களாக, இந்தப் பெருவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஈழத்தமிழர்கள் சார்பில் அஞ்சலிகளும், அவர்களது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காக எமது பிரார்த்தனைகளும்" என தெரிவித்தார். (க-8)

# உறவுகளுக்கு நீதி கோரிய போராட்டம் நான்காவது நாளாக தொடர்கிறது



(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நான்காவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் அணையாவிளக்கு பகுதியில் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி போராட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், சிறிலங்காவில் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழ் இனவழிப்புக்கும் காணாமல் ஆக்கப்படுதல் போர் குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# கருத்தமர்வு

(சாவகச்சேரி)

கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட முன்பள்ளிகளின் முன்னேற்றம் தொடர்பான கருத்தமர்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாவட்ட செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கருத்தமர்வில் பிரதம விருந்தினராக கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் தலைவர் ம.சூரியசேகரம், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன், மடு வலயக் கல்விப் பணிப்பாளர், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ் தேசிய கல்வியற் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது முன்பள்ளி கல்விக் கூடங்கள், முன்பள்ளி மழலைகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் முன்னேற்றம், ஆசிரியர்களின் ஊதியம், ஓய்வூதியம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

பாராட்டி வாழ்த்துகின்றோம்






திரு.சபாரட்ணம் கிரிசாந்தன்
உதவி அதிபர் (BIT, NDT in english)
SLEAS III

திரு.ஜெயராஜசிங்கம் ஜெயசுதன்
ஆசிரியர் (NDT, B.Ed (NIE) M.Ed)
SLTES III

01.09.2025 இல் பதவி உயர்வு பெற்ற எமது பாடசாலையின் உதவி அதிபர், ஆசிரியர் இருவருக்கும் எமது பாராட்டுக்களை தெரிவிப்பதோடு அவர்கள் மென்மேலும் பல பதவி உயர்வுகளை பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-3974)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசார கூட்டத்திடல் பிணக்குவியல் ஆனது


(தமிழ்நாடு)

**நடிகர் விஜயின் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் நேற்று முன்தினம் கரூரில் நடத்திய பிரசாரக் கூட்டத்தில் சிக்கிப் பலியானவர்களின் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.**











அதேநேரம் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்று வருபவர்களில் 21 பேர் கவலைக்கிடமாக உள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இறந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு, உடற்கூராய்வு நிறைவடைந்த சடலங்கள் அவர்களது உறவினர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கரூரில் இருந்து நேற்றைய தினம் விமானம் மூலம் உடனடியாக விஜய் சென்னைக்கு திரும்பியுள்ளார். இந்நிலையில் சென்னை யில் உள்ள விஜயின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக மத்திய அரசு அவருக்கு *'Y'* பிரிவு பாதுகாப்பை வழங்கி உள்ளது. தற்போது கரூரில் நடந்த கோர சம்பவத்தை தொடர்ந்து, அவரது வீட்டுக்கு பாதுகாப்பு கூடுதலாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் விஜய் வீட்டின் அருகே சாலைத் தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## நடந்தது என்ன?

கரூரில் தவெக தலைவர் விஜய்யின் பரப்புரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 40 பேர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த துயரச் சம்பவம் இந்தியாவையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்த நிலையில்,

த.வெ.க பரப்புரைக் கூட்டம் நடந்த பகுதியில் இருக்கும் செய்தியாளர் ஒருவர் பேசிய போது, விஜய் பேசிய இந்த இடத்துக்குப் பக்கத்தில தான் எங்களது வீடு. மொட்டை மாடியில இருந்து பார்த்தாலே விஜய் பேசுறது தெரியும். அன்று காலை 9 மணியில் இருந்தே கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது.

முன்னாலே போனால்தான் விஜயை பக்கத்தில பார்க்க முடியும் என்கின்ற ஆர்வம் எல்லோருக்கும் இருந்ததைப் பார்க்க முடிந்தது. மதியம் 12 மணிக்கே ஒரு பொதுக்கூட்டத்துக்கு என்ன கூட்டம் கூடுமோ அது கூடிவிட்டது.

அந்த சமயத்திலேயே விஜய் வந்திருந்தால் இவ்ளோ சேதாரம் ஆகியிருக்காது. லேட் ஆக ஆக கூட்டம் அதிகமாச்சு. கரண்டுக் கம்பம், ட்ரான்ஸ்பார்மர், ஜெனரேட்டர் என்று ஆபத்தைப் பற்றி யோசிக்காம எல்லா பக்கமும் ஏற ஆரம்பித்தார்கள்.

கரண்டு கம்பி மேலேஎல்லாம் ஏறாதீங்கள் என்று மைக்ல சொன்னார்கள். அப்பவும் யாரும் கேட்கவில்லை. அதுக்கு பிறகுதான் கரண்டைக் கட் பண்ணினார்கள்.

விஜயினுடைய பிரசார வாகனம் உள்ளே நுழைந்தபொழுது அதை நோக்கி பெருங்கூட்டம் அப்படியே தள்ளியது.

நிறையப் பேர் தங்களோடுடையகுழந்தை களை தோள் மேலே வைத்து விஜயை காண் பித்துக் கொண்டு இருந்தார்கள்.

கூட்டம் தள்ளியதில் அவர்கள் எல்லாம் அப்படியே சரிந்து கீழே விழுந்தார்கள். கீழே விழுந்த குழந்தைகள் மிதிபட்டதைக் கண்ணால பார்த்தோம். எல்லாப்பதற்றமும் ஓய்வதற்கு இரவு 12 மணிக்கு மேலே ஆகிவிட்டது என அவர் பதற்றத்துடன் தெரிவித்தார். (க)

## விசாரணைக்குழு நியமனம்

கரூர் சம்பவத்தை விசாரிக்க ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை நீலங்கரையில் உள்ள விஜய் வீட்டு வாசலில் ஒரு காவல் ஆய்வாளர் தலைமையில் 15 போலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தற்போது துணை இராணுவப் பாதுகாப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. 5 துணை ராணுவ வீரர்கள் தற்போது விஜய் வீட்டிற்குப் பாது காப்பு வழங்குகின்றனர்.

"விஜய் கைது செய்யப்படுவாரா?" என்ற கேள்விக்கு, "அரசியல் சார்ந்த கேள்விகளுக்கு நான் பதிலளிக்க தயாராக இல்லை. அறிக்கையின் படி சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்திருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரங்கேற்றம்" ஒரு கலையின் சாதனைப் பயணம்





அரங்கேறியது ஜேர்மன் நாட்டிலே. திரு. திருமதி சசிகுமார் கோமதி அவர்களின் செல்வப் புதல்வி நாட்டிய கலாஜோதி செல்வி ச.லறிஷாவின் மாபெரும் பரதநாட்டிய அரங்கேற்றம்.

யாழ் மண்ணின் வாசனைக் கலைநயம் போற்றிட அளவெட்டி என்னும் ஊரின் அடித்தளம் தந்தையாம். பசுமை தாய்மடல் போல இயற்கை அழகு ஆன்மீகத்தின்



அமைதி வரலாற்றின் வீரக்கதை போற்றிடும் சுதுமலை யின் உறைவிடம் தாயாம். அழகான தம்பதிகளின் வதிவிடம் அயல் நாடான ஜேர்மனியாம். இவர்களின் கலைத்தாகம் கொண்ட வண்ணச்சிட்டு செல்வி ச.லறிஷாவின் பரத நாட்டியம் ஜேர்மன் நாட்டிலே அரங்கேறியது.



நிருத்திய நாட்டியத் துறையில் முதன் முறையாக 06.01.2019 அன்று கால்த்தடம் பதித்து இன்று தனக்கென ஒரு அடையாளத்தை உரு வாக்கி கொண்ட நாட்டியத்தின் சிறப்புக் கதாநாயகி செல்வி ச.லறிஷா அவர்களின் சாதனைப் பயணத்தின் ஓர் கண்ணோட்டம்.

ஜேர்மன் நாட்டிலே (STADT HALLE RHEINE) 06.09.2025 அன்று கலை மணி பரத சூடா மணி அபிநய அரசி திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார் அவரின் மாணவியான நாட்டிய கலையின் நாயகி செல்வி ச.லறிஷா அவர்களின் பரத நாட் டிய அரங்கேற்றம் மிக சிறப்புடன் இடம்பெற்றது.

இனிதே இவ் அரங் கேற்ற நிகழ்வானது ஜேர் மனி நாட்டிலே STADT HALLE RHEINE என்னும் அரங்கேற மேடையில் இரு துருவ ங்கள் முன்னிலையில் சிறப்பாக அரங்கேற்றி முடி ந்தது. அந்த வகையில் இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக திருமதி ராஜ ஸ்ரீஇராமச்சந்திரன் (இந்தியா) மற்றும் கலை மாமணி திருமதி பின்னி கிருஷ்ணகுமார் (இந்தியா) அவர்களும் பிரதம விருந்தினராக செல்வி சிவாங்கி கிருஷ்ணகுமார் (தென்னிந்தியப் பாடகி) அவர்களும் திருமதி சாவித்திரி சரவணன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மேலும் இளம் ஆசிரியர்களான நாட்டிய கலாரத்தினம் பரதகலைமணி நாட்டிய கலாஜோதி திருமதி யாதவி அன்ரனி சுரேஷ்குமார் அவர்களும் நாட்டிய கலாரத்தினம் பரதகலை மணி நாட்டிய கலாஜோதி செல்வி பகீரதி கணேசலிங்கம் அவர்களும் குருவின் வழிநடத்தலில் முதன் முறையாக நாட்டுவாங்கம் இசைத்து பெரும் பாராட்டையும் பெற்றனர்.

நிகழ்வானது இவ்வளவு சிறப் பாக நடைபெற்றது என்றால் அணி செய் கலைஞர்களாக பல புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கு பற்றியது மிகச் சிறப்பாக இருந்தது. அதிலே நட்டுவாங்கம்: நாட்டிய கலைமணி. பரதசூடாமணி. அபிநய அரசி **"திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார்"** அவர்களும் பாட்டு சங்கீத கவிரத்திணா **"பவானி திரு கிசோர்குமார் சுப்பிரமணிய ஐயர்"** அவர்களும் வயலின்: **காஞ்சிகாமகோடி பீடஆஸ்தானவித்துவான்நெய்வேலி** **Dr.ராதாகிருஸ்ணன்(MA. music.ph.D)** அவர்களும் மிருதங்கம்:லயசூடாமணி கலாஜோதி **திரு. பிரசாந் பிரணவநாதன்** ஆகிய கலைத்துறை நாயகர்களின் சிறப்பான இசை அமைப்பால் இனிதான பரத நாட்டியம் மக்களின் இதயங்களில் இடம் பிடித்தவை மறக்க முடியுமா! எவ்வாறு இது சாத்தியம்.



கலாச்சாரத்தை விரும்பிய பெற்றோர்கள் அயல் நாட்டிற்கு சென்றாலும் மண் வாசனையை மறவாமல் தங்களுடைய பிள்ளைக்கு செல்வி ச.லறிஷாக்கு நாட்டியத்தை கற்றுக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி பெற்றோர்களாகிய திரு. திருமதி சசி குமார் கோமதி இவர்களின் அளப்



பெரிய அர்ப்பணிப்புடன் பிள்ளையை வழி நடத்தி குளிர் வெயில் பார்க்காது கலையைக் கற்றுக் கொடுத்தே ஆக வேண்டும் என்பதற்காக கலைத்தாகம் கொண்ட பெற்றோர்கள் இந்த பரத நாட்டியத்தை அரங்கேற்றி யது என்பது மிகப்பெரிய சாதனை. அதாவது குறிப்பாக யாழ் மண்ணிலே அல்லது இந்தியாவிலே இருந்திருந்தால் கூட கலைகள் அதிக படியாக இருக்கின்றன ஆனால் அந்த நாட்டிலே அதிகூடியளவு கலைகள் என்றால் என்னவென்று தெரியாத இடம். அந்த இடத்தில் இருந்து கொண்டு கல்வியையும் கற்று கலையை முறைப்படி கற்று அரங்கேறுவது என்பது வரலாற்று மிக்க சாதனை அல்லவா!

தன் இளம் வயதிலே கலை மீது ஆர்வம் கொண்டு இளஞ்சுடராய் பரத நாட்டிய அரங்கேற்றத்தில் அரங்கேறி நளின நடனத்தால் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் செல்வி ச.லறிஷா. இக் கலைத்துறையிலே தனது பதின்னான்காவது வயதில் சங்கீதத்தைப் பயின்று இன்று வீணை **(Rajhes Vaidya )**வாசிப்பதிலும் பாண்டித்தியம் பெற்று கலைத்துறை மட்டும் அன்றி வேறு துறையாகிய **Taekwondo-1 Black Belt** (போர்க்கலை) துறையில் ஆறாண்டு வயதில் முதல் வெற்றிப்பயணத்தை ஆரம்பித்தாள். "சிறு வயதில் கலைத் துறையில் வெளிப்பட்ட சிறந்த திறன் இந்த மங்கையின் தனிச்சிறப்பாகும்." **London ofaal fine arts Examination 1-8 Grade** முடித்து தனக் கான அங்கீகாரமாக கலாஜோதி பட்டத்தை செல்வி ச.லறிஷா பெற்றுக் கொண்டார்.**(8Th Grade Diploma)** அரங்கேற்றம் கண்ட செல்வி ச.லறிஷாவின் தாத்தா அப்புக்குட்டி நீதிராஜா (சுதுமலை) அம்மம்மா புஸ்பராணி (மானிப்பாய்) இவர்களின் அன்பிற்கு நிகர் யாரும் இல்லை. அரங்கேற்ற வெற்றிக்கும் இவர்களின் குடும்பத்தின் சமநிலை. அன்பு மற்றும் பாரம்பரியத்தின் ஊற்றுக்கும் இவர்களின் நெஞ்சில் இருக்கும் அன்பும் அனுபவமும் பாரம்பரியத்திற்கு இடையேயான பாலமாக திகழ்கிறது. தாத்தா தம்பு அருமைத் துறை (சுதுமலை)அப்பம்மா ராணி (அளவெட்டி) இவர்கள் மண்ணில் இல்லை என்றாலும் இவர்களின் ஆசிர்வாதம் பேத்தி லறிஷாவிற்கு என்றும் உண்டு.

மேலும் இவ் நிகழ்வானது வெகு விமர்சையாக நடைபெறுவதற்காக காமாட்சியம்மன் ஆலயத்தின் குருபூசகர் திருசிவ ஸ்ரீ ஆறுமுகம் பாஸ்கரக் குருக்கள் அவர்கள் இனி தாக ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இந்நிகழ்வினை ஜேர்மன் மொழியில் தொகுத்து வழங்கியவர் தொகுப்பாசிரியர் செல்வி நிருபமா நகுலேந்திரன் அவர்களும் செந்தமிழ் மொழியில் தொகுத்து வழங்கி யவர் திரு. ஜெயக்குமார் இராமேஸ் அவர்களும் ஆவர். அவர்களோடு சிறப் புத் தொகுப்பாளர் தாளம் **Media** திரு.தர்சன் இராஜகோபால் கலந்து சிறப்பித்தார்.

மேலும் நடன நாயகி செல்வி ச.லறிஷா அவர்களின் நாட்டிய அரங்கேற்றத்திற்காக பல துறைகளில் உள்ள கலைஞர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். அந்த வகையில் நாட்டிய நாயகி செல்வி ச.லறிஷா அவர்களின் அரங்கேற்ற நிகழ்வினை மிகவும் அழகாகவும் ரம்மியமான முறையிலும் ஒளிப்பதிவினை மேற்கொண்டவர்களாக புகைப்படக் கலைஞர் **Konessfotos (Germany)** மற்றும் காணொளிப் பதிவாளர் **Kiri video (Germany)** மற்றும் ஒலிப்பதிவு **VS Sound (Germany)**மற்றும் நுழைவாயில் அலங்காரத்தை மேற்கொண்டவர் **Suresh deco (Germany)** அரங்கேற்ற நாயகியின் அலங்கார வர்ணனை **Henna: Tattoos of nature (Germany)** மற்றும்**Chelva makeupartist(Germany)** இவர்களால் அலங்கரிக்கப்பட்டது.



மேலும் அரங்கேற்றத்திற்கு முன்னதாக செல்வி லறிஷாவின் சிறப்பு ஒளிப்பதிவினை மேற்கொண்டவர்களாக காஞ்சிபுரம் புகைப்படக் கலைஞர் **Mr. Rishi Raj (rishi. dancer.photographer)** விளங்குகிறார். (மேலும் இந்தியாவில் இருந்து **Preethi naturalsmakeupartistry (India), Save the date Video: In France Image Gowtham Mr Kowthaman Karunanithy, Invitation & Brochure: Menaka Card (India), costumes: Shanthi tailorsindia, Jewellery: Mahatemplejewels & Sukra Jewellery)**

மண் மயக்கும் மாபெரும் வீரம் தழைத்து ஓங்கி நின்ற ஈழத்தின் முத்தென வர்ணிக்கப்படும் இலங்கை நாட்டில் யாழ் மண்ணின் மைந்தனாக உதிர்த்த திரு. அ.சசிகுமார் மற்றும் மலையின் வதிவிடம் என சிறப்பிக்கப்படும் சுதுமலை மண்ணின் மைத்துனி திருமதி ச.கோமதி தம்பதியினருக்கு முத்தென விளங்கிய அபிநயஅரசி செல்வி ச.லறிஷா அவர்களின் இந் நடன சாதனை பயணத்திற்கு இரு தூண்களாக விளங்கிய தந்தை தாயின் ஆசிர்வாதம் மென்மேலும் சேர்வதாக....

இத்தனை சிறப்பு கலைஞர்களின் ஒத்துழைப்புகளோடு நடன மாது செல்வி ச.லறிஷாவின் இவ் நடன சாதனைப் பயணமானது இது மட்டுமல்லாமல் இவ் நடன மேடை மட்டுமன்றி பல மேடை கண்டு சாதனை இலக்கை நோக்கி உயர்ந்து மென்மேலும் ஜொலிக்க மனமாற வாழ்த்துகின்றோம்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியத் துணைத்தூதரக ஆதரவில் யாழ்ப்பாணம் விக்சித் பாரத் ஓட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "யாழ்ப்பாணம் விக்சித் பாரத் ஓட்டம் 2025" இன் நிகழ்வில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி ஆகியோர் கலந்து கொண்டு, ஓட்ட நிகழ்வைத் தொடக்கி வைத்ததுடன் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

உலகளாவிய அளவில் 150 இற்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற விக்சித் பாரத் ஓட்டம் 2025, இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும். இந்தியாவின் முன்னேற்றத்தையும் பண்பாட்டு மதிப்புகளையும் இந்நிகழ்ச்சி வெளிப்படுத்தியுள்ளது. (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:52<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBA, Web Designer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15925 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Dip in English, Teacher<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15944 |
| பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc, QS<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15926 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>7 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14988 |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 35<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:BSc,நில அளவையாளர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ:B/15927 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:73<br>12 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15951 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:74 1/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்-MBA, Accountant (UK)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15928 | பிறப்பு: 2001 NRC<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L ,தையல்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/15952 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்- பூரட்டாதி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(PR உள்ளவர்)<br>தொ.இ: B/15932 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 1 1/2<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15954 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 454

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# விலங்குகள் நோய் கொடுக்கும்!

ஒரு நண்பர் வந்தார். அவர் முகத்திலே கீறல்கள் நகத்தாலே விறாண்டியது மாதிரி இருந்தது.

"என்ன சார்.. வீட்டிலே தகராறா..?" என்று கேட்டேன்.

"இல்லை சார். இது செல்லமாகக் கீறினது!" என்றார்.

என்ன சார். அநியாயம். அதுக்காக இப்படியா? என்றேன்

ஆமாம் சார். பாவம் பூனை. அதுக்கு என்ன தெரியும் ? என்றார்.

"என்ன சொல்லுறீங்கள்?" என்றேன் ஒன்றும் புரியாமல்.

"எங்க வீட்டுலே செல்லமா வளர்க்கின்றோம் ஒரு பூனைக்குட்டி... அதுதான் விறாண்டிவிட்டது!" என்றார் கன்னத்தைத் தடவிக்கொண்டே!

"அதையெல்லாம் ஏன் சார் வளர்க்கிறீங்கள்" என்றேன்.

நீங்கள் தானே சார் சொன்னீர்கள்... இன்று ஒரு தகவலிலே. செல்லப் பிராணிகள் வளர்க்கிறது மனதுக்கும் நல்லது. உடம்புக்கும் நல்லது என்று!

இப்போது நீங்களே மாத்திப் பேசுறீங்களே இது என்ன சார் நியாயம்- என்றார்.

செல்லப் பிராணிகள் வளர்க்கிறதனாலே உடம்புக்கும் மனசுக்கும் நல்லது என்று சொல்லுறதும் உண்மை.

அதே நேரத்திலே... அதுக்கு வேண்டிய தடுப்பு ஊசியெல்லாம் போட்டு... சுத்தமாக வளர்க்கவில்லை என்றால் அது நமக்குக் கெடுதல் செய்யும் என்பதும் உண்மை! என்று சொல்லி அவரை சமாதானப்படுத்தினேன்.

பூனை விறாண்டினால் அதனாலே வருகிற இடைஞ்சலுக்குப் CSD (Cat Scratch Disease) பூனை விறாண்டல் நோய்! இதனாலே என்ன ஆகும் என்றால் முதலிலே சில நாட்களிலே காய்ச்சல், அதிகப்படியான களைப்புஉணர்ச்சி, எரிச்சல், தலைவலி, தெளிவற்ற பார்வை-கண்ணில் நீர்க்கசிதல் இதெல்லாம் இருக்கும்

ஆண்டிபயாட்டிக் மூலமாக இதைச் சரிப்படுத்தலாம். இருந்தாலும் ஒரு ஐந்தாறு மாதத்துக்கு கஷ்டம்தான்! மூன்றிலே ஒரு பூனைக்கு இரத்தத்திலே RH என்று ஒரு நுண்ணுயிர் இருக்கும் (ரோச்சலிமியா ஹென்சலா)

இதனாலே பூனைக்கு ஒன்றும் தொந்தரவில்லை. மனுஷனுக்குத் தான் தொந்தரவு!

பூனை கடிக்கிறதனாலே அல்லது லேஷா விறாண்டுறதுனாலே இந்த நுண்ணுயிர் மனிதனுடைய தோலைத் தாண்டி உள்ளே போய்விடுகிறது.நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு பாதிப்பு ரொம்ப அதிகமாக இருக்கும். அதனாலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பூனை மாதிரியே நாய் வளர்க்கிறவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மனிதர்களுக்கு வயிற்று உபாதைகளை உண்டாக்குகிற (Sarmonella, Camphylo bactor) இதெல்லாம் பூனையிடம் இருந்தும் நாயிடமிருந்தும் தான் நமக்கு வந்து சேருகின்றது!

ஈரலையும் பாதிக்கக்கூடிய சிறு நீரகத்தையும் நுண்ணுயிர் ஒன்று உண்டு. லெப்டோஸ் பைராஸிஸ் (Leptospirosis) என்று பெயர்.

இது நாய்களிடம் இருந்துதான் மனுஷனுக்கு வந்து சேருது!

ஒருத்தருக்கு ரொம்ப நாளா தொண்டையிலே தொந்தரவு! (Strep throat). அவர் வைத்தியரிடம் போனார். "சோதிச்சுப் பாருங்க வைத்தியர் என்றார்.

வைத்தியர் பார்த்தார். சோதிக்க வேண்டியது உங்களை இல்லை. உங்க நாயை!" என்றார். என்ன டாக்டர்... இப்படிச் சொல்றீங்களே! என்றார்.

ஆமாம். உங்களுக்கு வந்திருக்கிற இடைஞ்சலுக்கு உங்க வீட்டு நாய்தான் காரணமா இருக்கணும்! என்றார்.

அதேமாதிரி சோதனை செய்தார். அவர்கள் வீட்டு நாய் உடம்பிலே... ஸ்ட்ரெப்டோகாக்கஸ் (Streptococcus) என்கின்ற நுண்ணுயிர் இருந்தது!

அதனாலே.வீட்டிலே செல்லப்பிராணிவளர்க்கணும் என்று ஆசைப்படுகிறவர்கள்..

அறிவுபூர்வமாக அதுகளை வளர்க்க வேண்டும். அறிவுப்பூர்வமா அதுகள்கிட்டே பழகணும்! அதுதான் நமக்குப் பாதுகாப்பு...

ஒரு அம்மா என்னிடம் சொன்னார்.

"நீங்க சொல்வது எல்லாம் வாஸ்தவம்தான் சார். எங்க வீட்டிலே செல்லமா கஒரு நாய்குட்டி வளர்க்கறோம். அதுகூட எங்க வீட்டுக்காரர் சின்னப்பிள்ளை மாதிரி விளையாடிக்கொண்டிருப்பார். அந்த சமயத்திலேயெல்லாம் நான் ரொம்ப சர்வ ஜாக்கிரதையா அவங்களைக் கவனிச்சிக்கிட்டிருப்பேன்...!" அப்படி என்றார்.

ஏன் அப்படி...? நாய்குட்டி உங்கள் வீட்டுக்காரரை தவறுதலா கடித்துவிடக்கூடாது! என்பதற்காகவா?" என்றேன்!

அதுக்காக இல்லை சார் இவரு அந்த நாய்குட்டியை கடித்துவிடக்கூடாது என்பதற்காக என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சிவப்பு அவல்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அவல் பாரம்பரிய உணவு வகைகளில்ஒன்று. வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தில் வரக்கூடிய அவல்களில் சிவப்பு அவல் மருத்துவ பண்புகள் நிறைந்தது. சிவப்பு அவலில் நார்ச்சத்து, உயிர்ச்சத்து B, கல்சியம், நாகச்சத்து, இரும்புச்சத்து, மங்கனீசு, மகனீசியம் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. பட்டை தீட்டப்படாத அரிசியில் இருந்து தயாரிக்கப் படுவதால் இது சத்து நிறைந்தது.

தட்டையான அரிசியால் செய்யப்படும் ஆரோக்கியமான உணவு அவல். காலை, மாலை என இரண்டு வேளைக்கும் ஏற்ற சரியான உணவு இது. நெல்லை ஊற வைத்து இடித்து அதிலிருந்து உமியை நீக்கி அவலாக பயன்படுத்துகிறோம்.

கைக்குத்தல் முறையில் தயாரிக்கப்படும் அவலில் ஊட்டச்சத்துக்கள் அதிகம். சிவப்பு அவலானது சிவப்பு அரிசி வகைகளில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இதிலுள்ள ஆந்தோசயனின் என்னும் நிறமிதான் இந்த அரிசிக்கு இந்த நிறத்தை அளிக்கிறது. நமது உடலில் ஃப்ரீரேடிக்கல்களை எதிர்த்துப் போராடஉதவும் ஆக்ஸிஜனேற்றிகள் சிவப்பு அவலில் உள்ளது.

சிவப்பு அவல் புற்றுநோய் உண்டாகாமல் தடுக்கிறது. பாரம்பரியமாக சிவப்பு அவலைச் சாப்பிடும் போது அது புற்று நோய் அபாயத்தை தடுக்கச் செய்கிறது. சிவப்பு அணுக்களின் எண்ணிக்கைக்கு சிவப்பு அவல் உதவும். சிவப்பு அவலில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளது. எனவே கர்ப்பிணிப் பெண்களுக்கு தினம் ஒரு கப் அவல் சாப்பிடுவது சிறந்தது.

நீரிழிவு நோயாளிகள் அரிசி உணவை அதிகமாக சேர்க்கக்கூடாது. அதேநேரம் சிவப்பு அவலானது இரத்த சர்க்கரை அளவை சமன் செய்கிறது. இதிலிருக்கும் நார்ச்சத்து இரத்தத்தில் உடனடியாக குளுக்கோசு அதிகரிக்காமல் இருக்க உதவி புரிகிறது. இதனால் திடீர் சர்க்கரை அதிகரிப்பு நிலை உருவாகாமல் தடுக்கப்படுகிறது. குறைந்த சர்க்கரை உயர்த்தும் திறன் கொண்டது சிவப்பு அவல். சிவப்பு அவல் புரோபயாடிக் நன்மைகளை கொண்டுள்ளது.அவல் உற்பத்தியின் போது செயல்முறை அதை நொதித் தலுக்கு உட்படுத்தப் படுகிறது. இது புரதங்கள் மற்றும் காபோவைதரேட்டின் வளர்ச்சிதை மாற்ற விளைவாக ஏற்படும் நல்ல பக்ரீரியாக் களை தக்க வைத்துக்கொள்ள உதவுகிறது. எனவே குடலை ஆரோக்கியமாக வைத்திருக்க சிவப்பு அவல் உதவுகிறது. சிவப்பு அவல் ஒரு கப் அளவில் 250 கலோரிகள் உள்ளது. அதே அளவு வறுத்த அவலில் 333 கலோரிகள் உள்ளன.

இது நல்ல உணவும் கூட இதை சாப்பிட்ட பிறகு சில மணி நேரம் உங்கள் பசி உணர்வு கட்டுப்படுத்தப்படுகிறது. எடையைக் குறைக்க விரும்புபவர்கள் அவலை எடுக்கும்போது உப்புமா போல் செய்து சாப்பிடலாம். நல்ல பயன் கிடைக்கும். உடலுக்கு சத்துக் கொடுக்கவே நமது முன்னோர்கள் சிலவகையான உணவுகளை தனித்து பயன்படுத்தினார்கள். அப்படி அவர்கள் முக்கியத்துவம் கொடுத்த உணவு சிவப்பு அவல். சிவப்பு அவலை வாரத்தில் நான்கு முறையாவது சாப்பிடுவார்கள். உடல் பலவீனமாக உள்ளவர்களை தேற்ற உடலுக்கு பலம் கொடுப்பது சிவப்பு அவலாகும். குழந்தைகட்கு கொடுக்கும் போது சிவப்பு அவலைப்பாலில் இலேசாக ஊறவைத்து தேங்காய்த் துருவல், ஏலத்தூள், சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் என்புகளின் வளர்ச்சிக்கும் சிறந்தது சிவப்பு அவல். சிவப்பு அவலில் இருந்த கஞ்சி, பாயாசம் போன்றனவும் தயாரிக்கலாம். சிவப்பு அவல் சாப்பிட்டு வரும் போது உடல் சூட்டைத் தணித்து புத்துணர்ச்சியைத் தருகிறது. நீரிழிவு நோயாளிகள் அவ்வப்போது பசிக்கும் போது உடல் சூட்டை தணித்து புத்துணர்ச்சியை தருகிறது.

நீரிழிவு நோயாளிகள் அவ்வப்போது பசிக்கும் போது கொஞ்சம் அவலை வாயில் போட்டு மென்று சாப்பிடலாம். சிவப்பு அவல் உடலுக்கு உறுதியையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் தரும். வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் ஒருநாளைக்கு ஒரு வேளை அவல் உணவைப் பயன்படுத்தி வர மேற்படி பலன்களைப் பெற முடியும்.

அவல் ஒரு லேசான உணவாக இருப்பதனால் இலகுவில் செரிமானம் அடையக் கூடியதாகவும் இருக்கும். உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் அவலைப் பயன்படுத்தலாம். அவலில் காணப்படும் ஊட்டச்சத்துக்கள் ஏராளம் உண்டு. இதில் காணப்படும் இரும்புச்சத்து இரத்தசோகை ஏற்படாமல் தடுக்கக்கூடியது. இதிலிருக்கும் நார்ச்சத்து மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கக்கூடியது. சிவப்பு அவலை தாராளமாக அரிசிக்கு மாற்றாக எடுத்துக் கொள்ளலாம். அவலை கருப்பட்டி சேர்த்து சாப்பிடும் போது இன்னும் சிறந்த பலனைக் கொடுக்கும். கல்சியம், இரும்புச் சத்து என்பன இன்னும் கூடுதலாகக் கிடைக்கும்.

அவலை Easy meal என்று சொல்லுவார்கள். இது சுலபமாக செரிமானம் ஆகக் கூடிய உணவாகும். இதை எடுத்துக் கொள்வதால் வயிறு உப்பிசம், அஜீரணம் போன்ற பிரச்சினைகள் வராது. சிவப்பு அவலானது Gluten free உணவு என்பதால் இதை Gluten உணவுகளை சாப்பிட முடியாதவர்களும் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அவலில் உயிர்ச்சத்து $B_1$, $B_2$, $B_6$, $B_3$ ஆகியன உடல் ஆரோக்கியத்திற்கு மிகமிக உகந்தது.

# இராசிபலன்

29.09.2025
புரட்டாதி 13, திங்கட்கிழமை
சப்தமி பிற்பகல் 1.24 மணிவரை

மூலம் பின்னிரவு 4.10 மணிவரை
சுப நேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32- 9.02 மணிவரை

சந்திராஷ்டமம்
ரோகினி

வளவன்




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகையொன்று நட்பாகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.




சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், மனஊசஞ்சலங்கள் சற்றுக் கூடும்.




உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்படலாம்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




நண்பர்களின் ஒத்துழைப்பால் நயம் காண்பீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வாக்குமேன்மையுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள்.




செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.




விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வாகன சுகமுண்டு, இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.




எதிர்பாராத காரியமொன்று நடைபெற்று இன்பம் தரும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.




புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

அளவோடு இருந்தால் அவதிப்படத் தேவையில்லை எதிலும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### கல்கியின்

# பொன்னியின் செல்வன் 874

### காவியத் தொடர் பாகம் -IV



"போனவர்கள் இன்னும் வந்து சேரவில்லையே? என் பெரியன்னை வந்துவிட்டால், என் நெஞ்சிலிருந்து முக்கால்வாசி பாரம் இறங்கிவிடும் ஐயா! அவர் வந்தவுடனே, தாங்கள் என் தந்தையைச் சந்தித்துச் சொல்லிவிடுவீர்கள் அல்லவா? நான் என் அன்னை யிடம் ஆதியிலிருந்து எல்லாக் கதையையும் சொல்லியாக வேண்டும்"

"ஆகா! மலையமான் மகளுக்குத்தான் எத்தனை மனத் துன்பங்கள்! அதோடு, திருக்கோவலூர்க் கிழவனுக்கு இதெல்லாம் தெரியும் போது அவன் என்ன செய்யப் போகிறானோ? தன் பேரப் பிள்ளைகளுக்குப் பட்டம் இல்லை என்று தெரிந்தால், இந்த நாட்டையே அழித்து விடுவேன் என்று ஒருவேளை மலையமான் கிளம்பக்கூடும்"

"என் பாட்டனாரைச் சரிக்கட்டும் வேலையை என்னிடம் விட்டு விடுங்கள். இந்தப் பெண் வானதி இருக்கிறாளே, இவளுடைய பெரிய தகப்பனாரைப் பற்றித்தான் எனக்கு கவலையாயிருக்கிறது. கொடும் பாளூர்ப் பெண் சோழ சிங்கா தனத்தில் ஒரு நாள் வீற்றிருக்கப் போகிறாள் என்று அவர் ஆசை கொண்டிருக்கிறாராம். இந்தப் பெண்ணின் மனதிலே கூட அந்த ஆசை இருக்கிறது"

வானதி இப்போது குறுக்கிட்டு ஆத்திரம் நிறைந்த குரலில் "அக்கா!" என்றாள்.

அந்தச் சமயத்தில், வானதி மேலே பேசுவதற்குள், பூங்குழலி உள்ளே பிரவேசித்தாள். அவள் தனியாக வந்தது கண்டு மூன்று பேரும் சிறிது துணுக் குற்றார்கள்.

"கரையர் மகளே! உன் அத்தை எங்கே? திருமலை எங்கே?" என்று முதன்மந்திரி பரபரப்புடன் கேட்டார்.

"ஐயா! என் கர்வம் பங்கமுற்றது. நான் சொல்லிப் போனபடி அத்தையை இங்கு கொண்டு வந்து சேர்க்க முடியவில்லை."

"நீங்கள் போவதற்குள்ளேயே காணோமா? அல்லது வருவதற்கு மறுத்து விட்டாளா? அப்படியானால்"

"இல்லை ஐயா! கோட்டைக்குள்ளே அழைத்துக் கொண்டு வந்துவிட்டோம். அதற்குப் பிறகுதான் ஜனக் கூட்டத்திலே அகப்பட்டு அத்தை காணாமற் போய் விட்டார்!" என்றாள் பூங்குழலி. பின்னர் அச்சம்பவம் பற்றிய பின்வரும் விவரங்களைக் கூறினாள்:

மந்தாகினிதேவி நல்ல வேளையாகச் சேந்தன் அமுதன் வீட்டிலேயேதான் இருந்தாள். அவள் அங்கேயே இருக்கும் படியான காரணங்கள் நேர்ந்திருந்தன. நேற்றிரவு அடித்த புயலில் அமுதனுடைய வீடு சின்னாபின்னமடைந்திருந்தது. தோட்டத்திலிருந்த மரம் ஒன்று வீட்டுக் கூரை மேலேயே விழுந்திருந்தது. சேந்தன் அமுதனோ முதல் நாளிரவு மழையில் நனைந்த காரணத்தினால் கடும் ஜுரம் வந்து படுத்துப் பிதற்றிக் கொண்டிருந்தான். இரண்டு சகோதரிகளும் விழுந்த மரங்களை அகற்றி வீட்டைச் சரிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். பூங்குழலியைக் கண்டதும் மந்தாகினி மகிழ்ச்சி அடைந்தாள். திருமலையைக் கண்டு கொஞ்சம் தயங்கினாள். அவன் நம்மைச் சேர்ந்தவன் என்று பூங்குழலி கூறிய பிறகு தைரியம் அடைந்தாள். வழியில் பூங்குழலியும் திருமலையும் ஊமை ராணியிடம் என்ன சொல்லுவது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## காக்கையின் அருமை



(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு நாள் குருவிகள் கீச், கீச், என்று கத்தியவாறு அலை பாய்ந்து கொண்டிருந்தன. என்னவென்று எட்டிப்பார்த்த காகம் அங்கு ஒரு பாம்பு குருவிக்கூட்டை நோக்கி போவதை பார்த்து தன் குஞ்சுகளை காப்பாற்றுவதற்குத்தான் அவ்வாறு கத்துகிறது என்பதை புரிந்து கொண்டு ஆண் காகமும், பெண் காகமும் பாய்ந்து சென்று அந்தபாம்பை கொத்த ஆரம்பிக்க இவைகள் இருவரின் கொத்துதல்களை சமாளிக்க முடியாத பாம்பு விட்டால் போதும் என்று கீழே சர சர வென இறங்கி சென்றுவிட்டது. குருவிக்குஞ்சுகள் காக்கைகளிடம் வந்து மிக்க நன்றி சொல்லி அவர்களை கேலியும் கிண்டலும் செய்ததற்கு வருத்தம் தெரிவித்தன.

ஒரு முறை ஒரு வீட்டில் பெரிய விசேஷம் ஒன்று நடந்து கொண்டிருந்தது.

அந்த வீட்டில் இருந்தவர்கள் ஒரு இலையில் நிறைய சாப்பாட்டை எடுத்து வந்து வீட்டின் மேலே வைத்தனர். அப்பொழுது மேலே பறந்து கொண்டிருந்த பறவைகள் சாப்பாட்டின் வாசத்திற்கு கவரப்பட்டு அதை சாப்பிடுவதற்கு கீழே இறங்கின. உடனே அந்த வீட்டில் இருந்தோர் அந்த பறவைகளை விரட்டினர். சாப்பாட்டை மேலே கொண்டு வந்து வைத்துவிட்டு சாப்பிட விடாமல் விரட்டினால் என்ன அர்த்தம்? என்று பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொண்டன.

அப்பொழுது அந்த இரு காக்கைகள் பறந்து வந்து அந்த சாப்பாட்டை கொத்த ஆரம்பித்தன. உடனே அந்த மனிதர்கள் கையெடுத்து கும்பிட்டனர். மற்ற பறவைகளுக்கு ஒரே ஆச்சர்யம்? அந்த காகங்களிடம் அதெப்படி எங்களை சாப்பிடவிடாமல் விரட்டிய மனிதர்கள் நீங்கள் சாப்பிடும் போது மட்டும் கையெடுத்து கும்பிடுகிறார்களே? என்று கேட்டன.

அந்த காகங்கள் நாங்கள் சாப்பிடுவதை, தங்களுடைய முன்னோர்களே அந்த சாப்பாட்டை சாப்பிடுவதாய் மக்கள் நினைக்கிறார்கள், அதனால்தான் கை கூப்பி நன்றி தெரிவிக்கிறார்கள் என்றன. இதை கேட்ட மற்ற பறவைகள் காகங்களின் அருமையை உணர்ந்து கொண்டன. தாங்கள் கேலி செய்து பேசியதற்கு மன்னிப்பு கூறின.

(பிறரின் தோற்றம் முக்கியமல்ல அவர்களின் நற்செயல்கள் தான் கவனிக்கப்பட வேண்டும்)

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால் தான் புதிய கடல்களைக் கண்டுபிடிக்க முடியும்.

– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேராசிரியர்களால் நிறையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1974ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

ஓர் இனத்தின் தனித்துவத்தை எடுத்துக் கூறுவதில் கல்விச்சாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் காத்திரமான வகிபங்கை ஆற்றுகின்றன.

அந்தவகையில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எம் தமிழினத்தின் ஒரு பெரும் கல்விச் சொத்து.

தமிழ் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப் பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இன்று இனத்துவத்தை இழந்து நிற்கிறது.

பரவாயில்லை. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையால் என்ற அடிப்படையில் அதனை ஏற்றுத்தானாக வேண்டும்.

எனினும் எங்கள் தமிழ் மாணவர்களுக் காக உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கான சந்தர்ப் பத்தை இல்லாமல் செய்தவர்கள் நம்மவர் களேயன்றி, சிங்களவர்கள் அல்ல என்ற உண்மை யாழ்.பல்கலைக்கழக நுழைவாயி லில் எழுதப்பட வேண்டும்.

இஃது ஒருபுறமிருக்க, இப்போது யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பகதரு போல பேராசிரியர்கள் குவிந்த வண்ணமுள்ளனர்.

முன்பெல்லாம் வருடக்கணக்காகிய பேரா சிரியர் பதவிகள் இப்போது நாளொறும் அறி விக்கப்படுகின்றன.

பரவாயில்லை. எங்கள் விரிவுரையாளர் களின் கல்வித் தரம் மற்றும் பட்டப்பின் படிப்பு கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலான கற்றல்கள் என்பன வேகமாகும்போது, அவர் கள் பேராசிரியர் பதவிக்குரிய தகைமையைப் பெற்றுக் கொள்கின்றனர். இது உண்மையில் வரவேற்கப்பட வேண்டும்.

அதிலும் மிகக் குறைந்த வயதில் பேராசிரியர் பதவியைப் பெறுவதென்பது எங்களின் கல் வித் தகைமைக்கான சான்றாக அமையும்.

அதேநேரம் மாணவர்களின் கல்விக்கும் அது ஊக்க சக்தியாக இருக்கும் என்பதால், பேராசிரியர் பதவிகளைப் பெற்ற அத்தனை பேரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதேநேரம் பேராசிரியர்களால் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் நிரம்பி வழிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தடக்கி விழுந்தாலும் அது ஒரு பேராசிரியர் மீது விழுவ தாகவே இருக்கும்.

நிலைமை இதுவாயின், எங்கள் தமிழ் மக் களின் வாழ்க்கைத் தரத்தில் – எங்கள் இளைஞர்களின் வேலைவாய்ப்பில் – எங்கள் தமிழர் தாயகத்தின் அபிவிருத்தியில் – எங்கள் மருத்துவத் துறையில் – ஆய்வுத் துறையில் – பின்தங்கி வாழுகின்ற எம் மக்களின் உயர்வில் பேராசிரியர்களின் பங்கும் பணியும் எவ்வா றாக உள்ளன என்ற கேள்வி எழுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

ஆம், நாளுக்கு நாள் பேராசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதாயினும் எம் மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னமும் ஏற்ற முறாமல் இருக்கிறதெனில், பேராசிரியர்களின் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற எல்லைக்குள் இருக்கக்கூடிய விரிவுரை மண் டபங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனவா? என்ற ஐயம் எழவே செய்யும்.

எனவே மேன்மைக்குரிய பேராசிரியப் பெரு மக்களே! உங்களின் வாண்மை, உங்களின் ஆய்வுப்புலம் எங்கள் மக்களின் வாழ்வை உன்னதமாக்குவதிலும் கனிசமாகப் பயன் பட்டும் என்பதுதான் உங்களை நோக்கிய எங்களின் தாழ்மையான கோரிக்கை.

## இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ள கேப்பாப்புலவு மக்களின் 190 ஏக்கர் காணிகளையும் உடன் விடுவியுங்கள்

### ரவிகரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

முல்லைத்தீவு, கேப் பாப்புலவில் இராணுவத் தின் பிடியிலுள்ள பொது மக்களின் 190 ஏக்கர் காணிகளை விடுவிப்புச் செய்வதுடன் அகதி வாழ் க்கை வாழ்ந்து கொண்டி ருக்கும் அந்த மக்களை உடனடியாக அவர்க ளின் பூர்வீக வாழிடங் களில் மீளக்குடியமர்த் துமாறு வன்னி மாவட் டப் பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவி கரன் வலியுறுத்தியுள் ளார்.

பாராளுமன்றில் இது குறித்து மேலும் உரை யாற்றிய அவர்,

கேப்பாப்புலவு மக்கள் பாரிய போராட்டங்களை நடாத்தியதன் மூலமாக இராணுவத்தின் கைய கப்படுத்தலில் இருந்த பெருமளவான மக்களின் காணிகள் கடந்த காலங் களில் விடுவிக்கப்பட் டன.

ஆனால் தற்போதும் அந்த மக்களுடைய 190 ஏக்கர் காணிகள் விடு விக்கப்படாமலுள்ளன. அந்தக் காணிகள் விடு விக்கப்படவேண்டும்.

குறித்த கேப்பாப்பு லவு காணி விடுவிப்பு தொடர்பாக முல்லைத் தீவு மாவட்டச் செயலா ரிடம் கேட்டால் கூடிய விரைவில் விடுவிக்கப் படுமெனத் தொடர்ந்து தெரி வித்துக்கொண்டி ருக்கின்றார்.

அதேபோல் அமைச் சர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வரும் போது கேட்டால், அவர் களும் அதே பதிலையே கூறுகின்றனர்.

அதே போல் முல லைத்தீவு மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணை ப்புக் குழுத்தலைவர் உபாலி சமரசிங்கவி டமோ அல்லது வன்னி மாவட்ட அரசாங்கத் தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ கேட்டால் அவர்களும் கூடிய விரைவில் காணி கள் விடுவிக்கப்படுமென தெரிவிக்கின்றனர்.

ஆனால் குறித்த காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் கேப்பாப் புலவைப் பூர்வீகமாகக் கொண்ட 60 குடும்பங் கள் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அந்த மக் களை உடனடியாக அவர் களுடைய பூர்வீக வாழி டங்களில் மீள்குடியேற் றம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என் றார். (ந-7)

## பெற்றோரால் கைவிடப்பட்ட சிசு உயிருடன் மீட்பு

(அக்கரைப்பற்று)

ஒலுவில் பிரதேசத் தில் பிறந்து சில நாட் களான பெண் குழந்தை ஒன்று பெற்றோரால் கை விடப்பட்ட நிலையில் உயிருடன் மீட்கப்பட் டுள்ளது.

மீன்பிடிக்கச் சென்ற ஒருவரால் கொடுக்கப் பட்ட தகவலுக்கமைய குழந்தை மீட்கப்பட்டு ஒலுவில் பிரதேச வைத் தியசாலையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக் காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை க்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது.

குறித்த குழந்தையை பொலிஸாரின் ஊடாக நீதிமன்றில் பாரப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக வைத்தியசாலை நிர்வாகம் குறிப்பிட்டுள் ளது. (ந-7)

## சட்டவிரோத வாகனங்கள் மொட்டு உறுப்பினர் கைது

(கல்கிசை)

சட்டவிரோதமாக நாட் டுக்குள் கொண்டுவரப் பட்டு போலி ஆவணங் களின் கீழ்ப்பதிவு செய் யப்பட்டதாகச் சந்தேகிக் கப்படும் 6 கோடி ரூபா வுக்கும் அதிக பெறுமதி யான 3 ஜீப் ரக வாகனங் களை வைத்திருந்த குற் றச்சாட்டில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தெஹிவளை - கல்கிசை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா நேற்று (28) கைது செய் யப்பட்டுள்ளார்.

வலான மத்திய மோசடி ஒழிப்புப் பிரிவின் விசாரணையின் அடிப்ப டையில் இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டுள் ளது.

வலான மத்திய மோசடி ஒழிப்புப் பிரிவினரால் கடந்த 2024 டிசம்பர் 31 ஆம் மற்றும் 2025 ஜன வரி முதலாம் திகதிக ளில் இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சுமார் 2 கோடி ரூபா பெறுமதி யான மிட்சுபிஸி ரக ஜீப் வாகனமொன்றும் சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதி யான இரண்டு லாண்ட் ரோவர் ரக ஜீப் வாகனங் களும் கைப்பற்றப்பட்டு பிங்வத்த பொலிஸ் நிலை யத்தில் பாரப்படுத்தப் பட்டுள்ளன.

சந்தேகநபர் இன்று (29) நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்படுவார் எனப் பொலிஸார் தெரி வித்தனர். (ந-7)

## வயலுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

வயலுக்கு வரம்பு கட் டச் சென்ற நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார். கண்டி வீதி, அரி யாலைப் பகுதியைச் சேர் ந்த சின்னத்தம்பி ராஜ பாரதி (வயது - 60) என்ப வரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் அரியாலை - நாவலடிப்பகுதியில் கமம் செய்து வந்துள்ளார்.

நேற்று முன் தினம் (27) காலை வரம்பு கட்டு வதற்காக அங்கு சென் றுள்ளார். பின்னர் நேற்றி ரவுவரை அவர் வீடு திரு ம்பி வராத நிலையில் உறவினர்கள் அவரைத் தேடிச்சென்றனர்.

இதன்போது அவர் அங்குள்ள ஆலயம் ஒன் றிற்கு அருகிலுள்ள வெளி ஒன்றில் சடல மாகக் காணப்பட்டார்.

இந்நிலையில் அவ ரது சடலமானது மீட்கப் பட்டு உடற்கூற்றுப் பரி சோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளது. சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண் டார். (ந-7,104)

## கடற்பிராந்தியங்களில் கனமழைக்கு வாய்ப்பு

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் இருந்து காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் பலத்த மழை பெய்யக் கூடும் என வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேவேளை குறி த்த கடற்பிராந்தியங்க ளில் காற்று 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காலியில் இருந்து மாத்தறை மற் றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான மற்றும் சிலா பத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை மற் றும் முல்லைத்தீவு ஊடாக திருகோண மலை வரையான கடற் பரப்பு சற்று கொந்தளிப் பாக இருக்கும் எனவும் குறித்த கடற் பிராந்தியங் களில் கடற்றொழில் நட வடிக்கையில் ஈடுபடும் போது அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண் டலவியல் திணைக்க ளம் அறிவுறுத்தல் விடுத் துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
## பகுதி VI

11

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**பல்கலைக்கழக இயக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்துடன் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்துடைய ஒரு கலாசாலை நிறுவப்பட வேண்டும் என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சேர். பொன் அருணாசலம் அவர்களின் பெரும் முயற்சியினால் 1906 ஜனவரியில் இலங்கைப் பல்கலைக் கழகச் சங்கம் நிறுவப்பட்டது.

அரசாங்கத்திற்கு தலைவராக விளங்கிய அருணாசலம் அவர்கள், "தற்பொழுது பாடசாலைகளிலும் ஏனைய தொழில் நிலையங்களிலும் சிதறிக்கிடக்கும் சக்திகளை ஒரு முகமாக ஒழுங்கு படுத்தவும், ஆரம்ப உயர்தரப் பாடசாலைகளின் சிகரமாகத் திகழக் கூடியதும், நமது பாடசாலைகளும் கல்லூரிகளும், சக்தியிழந்து, சோர்வுற்று ஒரு முறையில் செலவைத் தடுக்கவும் மக்களின் பண்பை படிப்படியாக உயர்த்தி வரக்கூடிய பல்கலைக் கழகமொன்றினை அமைப்பதே எமது கழகத்தின் நோக்கமாகும்" எனக் கூறினர்.

1912 இல், இலங்கையின் உயர்தரக் கல்வி முறையினைப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழு பல்கலைக்கழகமொன்று அமைக்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்தது, அதனை நிர்வாகக் கழகம் ஏற்றது. ஆனால் அத்திட்டத்தினை முதலாம் உலகப்போர் தாமதப்படுத்திற்று. 1917ற்குப் பின் அப்பிரச்சினை மீண்டும் ஆராயப்பட்டு 1921 இல் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரி (Ceylon University College) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அக்கல்லூரி, இலண்டன் பல்கலைக்கழகத்தின் B.A, BSc., பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யத் தொடங்கியது. கல்லூரியின் முதல் கல்வியாண்டில் 115 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டனர், இறுதியில் எட்டு மாணவர்கள் இலண்டன் பல்கலைக்கழகத்தின் தேர்வில் கலந்து கொண்டனர், அவர்களில் ஏழு பேர் தேர்ச்சி பெற்றனர்.

ஆளுநர் ஹக் கிளிஃ போர்ட் பல்கலைக்கழகத்திற்கான ஒரு இடத்தை தெரிவு செய்ய ஒரு குழுவை நியமித்தார். மாணவர்கள் தங்குவதற்கு வசிப்பிட வசதி கொண்ட பல்கலைக்கழகம் ஒன்றை கண்டியில் அமைப்பதற்கு அக்குழு பரிந்துரைத்தது. 1928இல் பல்கலைக் கழகமொன்று கண்டியில் தாபிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை சட்டக் கழகம் அங்கீகரித்தது. தற்போது இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட 15 பல்கலைக்கழகங்களும் 3 வளாகங்களும் உள்ளன.

**சமய மறுமலர்ச்சி இயக்கமும் கல்வியும்**

19 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சமயம், ஆங்கிலக் கல்வி, ஐரோப்பிய நாகரிகம் என்பவை எழுச்சியடைய, பௌத்த, சைவ மதங்களும், சிங்கள, தமிழ் மொழிகளும் பின்நிலையை அடைந்தன. இவ்விதமாக அந்நிய ஆட்சியினல் ஒரு நாட்டு மக்களின் மொழி, சமயம், கலாச்சாரம் போன்ற துறைகளுக்குக் கெடுதி ஏற்படும் போது, அந்நாட்டில் தேசிய விழிப்புணர்ச்சியும், ஆட்சியாளருக்கெதிரான தேசிய இயக்கமும் தோன்றுதல் இயல்பே. இது வரலாற்றில் காணப்படும் ஒரு பொது விதியாகும். இவ்வுண்மையை நாம் இலங்கையின் வரலாற்றிலும் காணலாம்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சிங்களவர் தாம் இழந்து போன கலாசாரத்தையும், மறந்துபோன பண்பாட்டினையும் புதுப்பித்து நிலை பெறச் செய்ய வேண்டுமென்ற ஒரு மறுமலர்ச்சி இயக்கம் முளை கொள்ளலாயிற்று. இவ்வியக்கம் பௌத்த பிக்குகளின் மத்தியில்தான் முதன் முதல் அரும்பியது. தொன்றுதொட்டு சிங்கள மொழியினதும் பௌத்த மதத்தினதும் பாதுகாவலராக விளங்கி வந்த பிக்குகள், அவை அழிந்து போகா வண்ணம் பாதுகாத்ததற்கு வன்சமர் தொடங்கினர்.

**கேணல் ஓல்க்கொட்டும் பௌத்த பிரமஞான சங்கமும்:**

1862 ஆம் ஆண்டு மிகத்துவ குணுணந்த தேரோ என்ற பௌத்த பிக்கு, தம் மதத்தைப் பிரசாரம் செய்வதில் ஊக்கம் மிகுந்தவராய், நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று பிரசங்கங்கள் பல நடத்தினார். ஆயிரக்கணக்கான மக் கள் அவரது தர்ம உப தேசங்களைக் கேட்கக் குழுமினர். 1873 இல் பாணந்துறையில், அவருக்கும், வண. டேவிட் டி சில்வா என்ற கிறிஸ்தவ போதகருக்குமிடையே ஒரு பெரும் தர்க்கம் நடந்தது. "ரைம்ஸ் ஒவ் ஒலோன்" பிரசுரித்த இத்தர்க்கத்தின் பிரதியொன்று அமெரிக்காவில் கேணல் ஹென்றி ஸ்றில் ஒல்க்கொட் (Col. Henry Steele Olcott) என்பவரின் கைகளுக் கெட்டிற்று. இவ்வெளியீடுதான் ஒல்கொட்டை இலங்கையுடன் இணைக்க உதவிய சாதனமாகும்.

ஒல்க்கொட், நியூஜேர்சியில் 1832 ஆகஸ்ட் 2 இல் பிறந்தவர். அவர் விவசாய ஆராய்ச்சியிலும் விவசாயத்தைப் பற்றி நூல்கள் எழுதுவதிலும் ஆர்வம் மிகுந்தவராய் விளங்கினர். 1858 இல் அவர் ஐரோப்பாவிற்குச் சென்று விவசாய மேதை யெனப் பெரும் கீர்த் தியும் புகழும் பெற்றர்.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் தொடங்கியபொழுது, அவர் வடஇராச்சிய இராணுவத்தில் சேர்ந்து நீக்கிரோக்களின் விடுதலைக்காக உழைத்தார். 1875 இல் ஒல்கொட், திருமதி பிளவற்ஸ்க்கி (Madame Blavatsky), பிற ஆதரவாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து நியூயோர்க்கில் பௌத்த பிரமஞான சங்கத்தை (Buddhist Theosophical Society) நிறுவினார்.

1878இல் அவர் பம்பாய் வந்து, இந்தியாவில் "கதர்" இயக்கத்திற்கு ஆதரவளித்தார். 1882 இல் பௌத்த பிரமஞான சங்கத்தின் தலைமைக் காரியாலயம் சென்னையில் நிறுவப்பட்டது. 1880 மே 15 இல், ஒல்க்கொட்டும் பிளவற்ஸ்கியும் இலங்கை வந்தனர். அவர் காலியில் வெலிவிற்ற விஜயநாந்தறாம விகாரையில் பௌத்த மதத்தைத் தழுவினர். ஐரோப்பிய வேர்களை கொண்ட பிரபலங்களில் முதன் முதலாக முறையாக பௌத்தத்திற்கு மாறிய பெருமை இவரையே சாரும்.

அதற்குப்பின் அவர் இலங்கைப் பௌத்தர்கள் அனுபவித்த இன்னல்களைப் போக்குவதற்காக உழைக்க ஆரம்பித்தார். ஒரு சில ஆண்டுகளுக்குள் பிரமஞான சங்கம், மூன்று கல்லூரிகளையும் இருநூறு பாடசாலைகளையும் திறந்து 200,000 மாணவர்களுக்கு கல்வி பயிற்றியது.

ஒல்கொட்டின் முயற்சிகள் இலங்கையுடன் நின்றுவிடவில்லை. பிரமஞான சங்கத்தின் சேவைகள் அமெரிக்கா முதல் ஜப்பான் ஈறாகப் பரந்தன. அவர் உலகெங்கும் திரிந்து, விரிவுரைகள் நிகழ்த்தி, ஐரோப்பியருக்கு பௌத்த மதத்தை அறிமுகம் செய்யவும் அதில் ஓர் ஆர்வத்தை உண்டாக்கவும் முனைந்தார்.

பௌத்தருக்குச் சமயக் கொடியை ஆக்கிக் கொடுத்த பெருமையும், இலங்கையில் முதன் முதல் வெசாக் பௌர்ணமி தினத்தை அரசாங்க விடுமுறை தினமாக்கிய பெருமையும் அவருக்கே உரியது.

கொழும்பு மற்றும் காலியில் இரு வீதிகளுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு எதிரில் அவரது உருவச்சிலை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. மேலும் அவர் தொடங்கிய பௌத்த மையங்களில் அவரை நினைவு கூரும் விதமாக சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவரது நினைவு தினம் இன்றும் இலங்கையில் பலராலும் நினைவுகூரப்படுகிறது. அவர் தன்னை ஆசியக் கண்டத்தின் ஆன்மிகப் பண்பாடுகளைக் காக்க வந்த ஒரு நாயகனாகவே எண்ணி கொண்டார். மேலும் இவரது சிந்தனைகளால் உந்தப்பட்டு இலங்கையில் பௌத்தம் புத்துயிர் பெற்றது, அது அங்கிருந்த மக்களைப் பிரித்தானியக் குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு மனப்போக்கை ஏற்படுத்தியது. ஒல்காட் உலக மதங்களின் கூட்டமைப்பில் பௌத்தத்தை 1893 ஆம் ஆண்டு சிகாகோவில் இணைக்க உதவி புரிந்தார்.

தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில்...

ழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்திரு.எஸ்.மாக்கஸ் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்று (28) 57ஆவது நாளாக போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் அங்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டம் முழுவதும் இன்று திங்கட்கிழமை பொது முடக்கலுக்கு அழைப்பு விடுக்கின்றோம். அனைத்துச் செயற்பாடுகளையும் முழுமையாக நிறுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் பொதுப் போக்குவரத்துகள் அனைத்தையும் நிறுத்தி, வர்த்தக நிலையங்களை மூடி மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்து எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்க வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்கள் இன்று கடமைகளுக்குச் செல்லாது எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்று காலை 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமாகும்.

குறித்த பேரணி மன்னார் பஜார் பகுதியை வந்தடையும். பின்னர் அங்கு எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்படும். குறித்த போராட்டம் மதியம் 1.30 மணி வரை முன்னெடுக்கப்படும். போராட்டத்தின் இறுதியில் எமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் வழங்கப்படும்.

எனவே மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் எமது உரிமைக்கான போராட்டத்தில் மீனவர்கள், வர்த்தகர்கள், பொதுப் போக்குவரத்து சேவையை முன்னெடுப்போர் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என எஸ்.மாக்கஸ் அடிகளார் கேட்டுள்ளார். (ந-7,285)

## நாமல் உள்ளிட்ட...

அஜித் ராஜபக்ஷ, திஸ்ஸ குட்டியாராச்சி மற்றும் குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட இருபது நபர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

பல்வேறு பொது அமைப்புகள் மற்றும் தனிநபர்களால் குற்றப் புலனாய்வுத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

மேலும் விசாரணைகளின்போது வெளிவரும் தகவல்களின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## இளம் ஆசிரியர்...

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இவர் குருநகர்ப் பகுதியில் வாடகைக்கு அறை ஒன்றை எடுத்து தங்கியுள்ளார். இந்நிலையில் அவரது உறவினர் ஒருவர் நேற்று முன்தினம் காலையும் மதியமும் உணவு கொண்டு சென்று கொடுத்துள்ளார்.

பின்னர் இரவு (27) அங்கு சென்ற வேளை அவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

அவரது சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ந-7,104)

## ராஜிதவுக்கு...

ளதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு அறிவித்துள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுக மணல் அகற்றும் பணியை [illegible] நிறுவனத்திடம் ஒப்படைத்ததால், அரசாங்கத்துக்கு 2.6 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக இழப்பு ஏற்படுத்தியமையை முன்வைத்தே இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டதையடுத்து, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு இவ்விடயத்தை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இவ்வழக்கில் ராஜித சேனாரத்ன மற்றும் முன்னாள் மீன்பிடித் துறை முகக் கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி லியனகே ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களைத் தற்போது நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ள நிலையில் இவ்வழக்கு 2026 ஜனவரி 30ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## வாக...

போக்குவரத்துத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாகனங்களின் கண்ணாடிகளில் மோட்டார் வருவாய் உரிமம் மட்டுமே ஒட்டவும். சூரிய ஒளி உட்புறத்தில் நுழைவதைத் தடுக்க கண்ணாடியின் மேற்பகுதியில் ஐந்தில் ஒரு பகுதியை இருட்டாக்குவதற்கும் மாத்திரமே அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## ஜனா...

லிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி - தமிழரசுக் கட்சி சந்திப்பு மற்றும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசாங்கத்தின் முன்னெடுப்புகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைக்கிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் யார் உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்படுகின்றார்கள் என்பதில் பல்வேறு [illegible] உள்ளன. சுய அரசியல் நலன்களுக்காகவே பலரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்துப் பேசுகின்றனர். ஆனால் அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து அரசாங்கம் கூடுதல் முக்கியத்துவம் அளித்துச் செயற்படுகிறது. இந்த இலக்கை அடைவதற்கு அனைத்துத் தரப்பினருடனும் ஜனாதிபதி கலந்துரையாடுவாரென அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 5966
E 8 1 3 5 2 0
அத சம்பத
E 3 5 2 0
சீட்டிழுப்பு இலக்கம் 541
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 0082
கடகம் 05 10 11 49

தன நிதானய
திகதி - 2025.09.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1996
S 10 36 52 58 S

மெகா பவர்
திகதி 28/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2314
F 20 18 19 21 67

ஜய
திகதி 2025.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 0234
E 1 1 7 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4208
சீட்டிழுப்பு திகதி 28.09.2025
U 05 29 75 76
U
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.28
சீட்டிழுப்பு இலக்கம் 1275
சிம்மம் 19 25 37 48 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
28.09.2025 வெற்றி வாரம் 0674
சுப்பிரி தன சம்பத
M 3 7 0 8 5 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,238,870.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2940
சீட்டிழுப்பு திகதி 2025.09.28 தினம் ஞாயிற்றுக்கிழமை
05 08 49 53 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,187,106.40

திகதி 28.09.2025 வெற்றி வாரம் 5101
சனிதா
02 04 21 22 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,774,569.20

சசிரி
வெற்றி வாரம் 0780
சீட்டிழுப்பு திகதி 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை
17 25 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4652
சீட்டிழுப்பு திகதி 28.09.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
22 40 45 53 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 37 10 16 57 71
சீட்டிழுப்பு வாரம் 2116
28.09.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.596,775,631.20

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2766
சீட்டிழுப்பு திகதி: 2025.09.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,513,425.60
அத கோடிபதி ADA KOTIPATHI
28 39 40 71 R
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3979)

076 825 7716 (ஆகாஸ்)

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு 2026

புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம்-06

தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

01.10.2025 (புதன்கிழமை)


மாலை 3:30 - 5:30 வரை

அனுமதி வழங்கப்படுகிறது (5520)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் செல்வம் சஜேந்திரன்



மலர்வு: 21.11.1994

உதிர்வு: 27.09.2025

புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் அமரர் செல்வம் சஜேந்திரன் அவர்களின் திடீர் மறைவினால் தாங்கொணாத் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:-
பத்திரிசிய குடும்பம்

(C-3982)

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது

விசேட செயலமர்வு திகதிகளில் மாற்றம்

11,12,13 October 2025

பொறியியல்
தொழில்நுட்பவியல்

"காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை"

வெலிங்டன் சந்தி,
(லிங்கம் கூல்பார் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-3975)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-3978)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3978)

V2 TRAVELS 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com

# மரண அறிவித்தல்



மலர்வு 1997.01.08 — உதிர்வு 2025.09.26

## திருமதி நிமலறாயு சாருமதி

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிமலறாயு சாருமதி அவர்கள் கடந்த (26.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரகுமார் - இந்திராணி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குலசிங்கம் - மகாலட்சுமி அவர்களின் மருமகளும் நிமலறாயு அவர்களின் அன்பு மனைவியும் தங்கா, சாரங்கா, டிலக்சன், றூபினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தகுமார் - குமுதினி (Londan), தவம் - லதா, கோபு - பவா, சசி - தாரணி (Londan), காலஞ்சென்ற லூக்அன்ரன் ஆகியோரின் மைத்துனியும் மாதேஸ், ஆகாஸ், அபிநயா, கிருஷாந், சஞ்சு, ரக்ஷனா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு சித்தியும் அஸ்வா, அஸ்விதா ஆகியோரின் பாசமிகு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2025) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
கே.எம்.என்.மகாலட்சுமி குடும்பம்
077 250 0020 / 077 500 0055
077 413 2033

ஆனைக்கோட்டை.

(C-3977)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org